என்று சொல்லப்படுகிறது. தே.மு.தி.க. வேட்பாளராக மாபா பாண்டியராஜன் பவனி வருகிறார். இவர் இதே மாவட்டத்தைச் சேர்ந்தவர். பா.ஜ.க. போன்ற கட்சியில் இருந்துவிட்டு தே.மு.தி.க.வில் ஐக்கியமானவர். இத்தொகுதியில் 15 சதவீதம் வரை இருக்கும் நாடார் சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பது கூடுதல் பலம்! தான் நடத்திய வேலை வாய்ப்பு முகாம்கள் மூலம் இளைஞர்கள் மத்தியில் அறிமுகமானவர் பாண்டியராஜன். தவிர ஏற்கெனவே கடந்த சட்டமன்றத் தேர்தலில் இங்குள்ள தொகுதிகளில் போட்டியிட்ட தே.மு.தி.க. வேட்பாளர்கள் சுமார் 1.18 லட்சம் வாக்குகளுக்கும் அதிகமாக பெற்றுள்ளார்கள். இப்படி ‘முரசு’ கொட்டி வாங்கிய வாக்குகள் இந்த முறை தனக்கு உதவும் என்று நம்புகிறார் பாண்டியராஜன்.

அடுத்து நாடார் இன மக்களின் வாக்கு வங்கியை குறி வைக்கும் கட்சி சமத்துவ மக்கள் கட்சி. பா.ஜ.க.வுடன் கூட்டுச் சேர்ந்திருக்கும் ச.ம.க., விருதுநகர் தொகுதி தமக்கே வேண்டும் என்று கேட்டு வருவதாகத் தகவல். அப்படி நடக்கும் பட்சத்தில் பெருவாரியான நாடார் வாக்குகள் தே.மு.தி.க.விற்கும், ச.ம.க.விற்கும் இடையே பிரியும் வாய்ப்பு இருக்கிறது.

விருதுநகர் தொகுதியில் நாடாரின மக்கள் யாருக்கு சாதகமாக வாக்களிக்க விரும்புவார்கள் என்பது குறித்து நாடார் மகாஜன சங்க பொதுச் செயலாளர் கரிக்கோல்ராஜிடம் பேசினோம்.

“விருதுநகர் தொகுதியைப் பொறுத்தவரையில் நாயக்கர், தேவர், நாடார் மற்றும் தலித் இனத்தவர்கள் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக இருக்கின்றனர். வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக நாங்கள் இருந்தாலும் ஆளும் தரப்பினர் எங்களை வாக்குக்காக மட்டுமே அணுகுவார்கள். எதுவும் செய்து தர மாட்டார்கள். ஆனால் இந்த முறை நாங்கள் ஏமாறத் தயாராக இல்லை. மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் நாடாரினத்தைச் சேர்ப்பது; பனைத் தொழிலுக்கு ஆதரவு மற்றும் கள் இறக்க அனுமதி கொடுப்பது போன்ற நாடார் இன மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு எந்தக் கட்சி உறுதியளிக்கிறதோ அந்தக் கட்சியைத்தான் நாங்கள் ஆதரிப்போம்” என்றார் உறுதியாக.


ராஜா


வரதராஜன்


கரிக்கோல்ராஜ்


பாண்டியராஜன்

தொகுதியில் முக்குலத்தோர் வாக்கு வங்கியே அதிகம் என்பதால் அ.தி.மு.க. அணியும், தி.மு.க. அணியும் தங்களது வேட்பாளர்களாக முக்குலத்தோர் இனத்தவரையே நிறுத்தும் என்ற பேச்சு எழுந்துள்ளது. இந்த இரு அணியினருக்குமே சவாலாக கார்த்திக்கின் நாடாளும் மக்கள் கட்சி களத்தில் இறங்கும் எனத் தெரிகிறது. ஆனால் சென்ற சட்டமன்றத் தேர்தலில் இத்தொகுதியில் இக்கட்சி சார்பில் போட்டியிட்ட ஆறு வேட்பாளர்களும் சுமார் 17000 வாக்குகள் மட்டுமே பெற்றுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றபடி தேவரின வாக்குகள் தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. இடையே பிரிந்து கிடப்பது போலவே தோன்றுகிறது.

இந்நிலையில் நாம் முக்குலத்தோர் வாக்கு வங்கி குறித்து பசும்பொன் தேவர் மக்கள் இயக்கத் தலைவர் வெள்ளைச்சாமி தேவரிடம் பேசினோம்.

“தமிழகத்தின் 20 தொகுதிகளில் தேவர் சமுதாயத்தினர் தான் வெற்றி, தோல்வியை நிர்ணயிக்கும் சக்தியாக இருக்கின்றனர். அதில் இப்போது புதிதாகச் சேர்ந்திருக்கும் தொகுதிதான் விருதுநகர். இதனால்தான் அரசியல் கட்சியினர் தேவரின மக்களை வேட்பா